செய்தி வெளியீடு எண் :42 நாள் :29.05.2020

**தேனி மாவட்டம்**
**70 சதவீத மானியத்துடன் கூடிய**
**சூரிய சக்தி பம்பு செட்டுகள் பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-**

******

வேளாண்மையில் நீர்ப் பாசனத்திற்கு தேவையான எரிசக்தியினை உறுதி செய்யும் நோக்கத்துடன் 2013-2014ஆம் ஆண்டு முதல் சூரியசக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளை தமிழக அரசு விவசாயிகளுக்கு மானியத்தில் அமைத்துக் கொடுத்து வருகிறது.

சூரியசக்தி பம்பு செட்டுகள் மூலம் மின் இணைப்பு தேவையின்றி, பகலில் சுமார் 8 மணிநேரம் பாசனத்திற்கு தடையில்லா மின்சாரம் பெறமுடியும். மத்திய அரசு, பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான எரிசக்தி பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் (PM-KUSUM) கீழ் தமிழகத்திற்கு 17,500 மின்கட்டமைப்பு சாராத, தனித்தியங்கும் சூரியசக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்திட ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் மத்திய அரசின் 30சதவீத மானியத்துடனும் மற்றும் தமிழக அரசின் 40 சதவீத மானியத்துடனும் ஆக மொத்தம் 70சதவீத மானியத்தில் செயல்படுத்தப்படுகிறது. மீதமுள்ள 30சதவீதம் விவசாயிகளின் பங்களிப்பாகும்.

எனவே, இத்திட்டத்தின் மூலம் பயன்பெற ஆர்வமுடைய விவசாயிகள் செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, 455, மதுரை ரோடு, சார்நிலைக்கருவூலம் அருகில், தேனி, நேரிலோ அல்லது 04546-253439 தொலைபேசி எண்ணிலோ அல்லது உதவி செயற்பொறியாளர்கள் 99407 02357, 94863 63555 கைபேசி எண்களில் தொடர்பு கொண்டு பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**